மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 85, திரு. முருகையா பாண்டியன், இருக்கையில் இல்லை. திரு. வி. கே. சின்னசாமி கேட்கிறார். அவர் ஈரோடு அதில் வருகிறது என்று சொல்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

85–

பாபநாசத்திலிருந்து சில இடங்களுக்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகப் பேருந்து இயக்குதல்.

20458* – **திரு. ஆர். முருகையா பாண்டியன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, பாபநாசம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து திருவனந்தபுரம், தேனி, ஈரோடு செல்லும் வழித்தடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பாபநாசத்திலிருந்து திருவனந்தபுரம், தேனி, ஈரோடு ஆகிய இடங்களுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமென்றால் ஈரோடு பகுதியிலிருந்து நேராகச் செல்கிற பஸ் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பஸ் தான். இது விரைவாகவும் செல்கிறது. எனவே ஜீவா போக்குவரத்துக் கழகம் மற்ற வேறு போக்குவரத்துக் கழகங்களில் இருப்பதை போல திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலிருந்து ஒரு வண்டியாவது விடுவீர்களானால் வியாபார ரீதியாக தென் மாநிலங்களிலிருந்து ஈரோடு பகுதிக்கு வருவதற்கும், ஈரோடு பகுதியிலிருந்து மக்கள் தென் பகுதிகளுக்கு சென்று வருவதற்கும் நல்ல வாய்ப்பாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொது மக்கள் நலன் கருதியும், வியாபாரிகள் நலன் கருதியும், பேருந்து விடுவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1994 மார்ச் 25]

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கூடுதலாகப் பேருந்துகளைக் கேட்டு இருக்கிறார்கள். அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். பாபநாசம், ஈரோடு வழியாக உள்ள தட நீளம் 412 கிலோமீட்டர். திருவள்ளுவர் போக்குவரத்து வழித் தடங்களில் வழித்தட எண் 624, திருநெல்வேலியிலிருந்து ஈரோட்டுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு முறை பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக அங்கேயிருந்து பேருந்துகளை இயக்க முடியுமா என்று கேள்வி கேட்டு இருக்கிறார்கள். அங்கேயிருக்கிற கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலேயிருந்து பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். நாம் குறைந்த அளவிற்கு விரைந்து செல்லவேண்டும் என்று சொன்னால், அந்தந்த மாவட்டங் களிலேயிருக்கிற போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக இயக்கப்படுகிற பேருந்துகள்தான் விரைந்து அந்தப் பகுதிகளுக்கு குறிப்பிட்ட நேரத்திலே செல்வதற்காக இப்போது மாற்றி நாம் அமைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி பன்னீர்செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி, ஈரோடு, திருவனந்தபுரம் இணைப்பாக, பாபநாசத்திலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்து விடுகின்ற சாத்தியகூறு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவ்வாறு செய்வதற்கு சாத்தியம் இல்லை என்றால், நம்முடைய இதய தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலே அமைந்திருக்கிற போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், இரண்டு மாநிலங்களையும் இணைக்கின்ற பகுதியாகவும், தேனி, போடி, குறிப்பாக தேனிக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய போடித் தொகுதி, புரட்சித் தலைவயினுடைய முதல் தொகுதியாக இருக்கிற காரணத்தால், போடித் தொகுதி வழியாக அந்தப் பேருந்து செல்வதற்கு ஏற்பாடு செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் ஊர் இதிலே வரவில்லை. (குறுக்கீடு) திரு. ஆ. கு. சீனிவாசன்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பெருந்தகையினார், திருவள்ளுவர் பெயரைப் போற்றும் வகையில், தமிழகம் பூராவும், திருவள்ளுவர் பேருந்துகள் செல்கின்றன. 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்' என்ற வள்ளுவருடைய வாக்குக்கு இணங்க, மாண்புமிகு டாக்டர், புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தமிழகத்தின் தாயாகவும், தாய் கடவுளாகவும், இறைவனாகவும் மக்கள் ஏற்றுக்கொண்டு தமிழகம் இயங்கிக் கொண்டு வருகிறது. இந்நிலையில், அம்மா அவர்களுக்கு மேலும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தொகுதியில் திருவள்ளுவர் பஸ் என்று சொன்னாலே, அந்தப் பகுதிமக்களுக்குத் தெரியவில்லை. ஏன் என்று சொன்னால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீனிவாசன், பாபநாசத்திலிருந்து உங்கள் ஊருக்கு வண்டி தேவை என்று வேண்டுமானால் கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : இருந்தாலும், என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் உள்ள ஆரணி பகுதி வழியாக திருவள்ளுவர் பேருந்து செல்கிறது. அதேபோல், இறைவனுடைய வணக்கங்கள் ஒவ்வொரு மக்களுக்கும் தேவை என்ற அடிப்படையில், திருவண்ணாமலை கோவில் இருக்கிறது. காஞ்சிபுரத்தில் காஞ்சி காமாட்சி அம்மன் கோவில் இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் ஊரைச் சுற்றி என்னென்ன ஊர்கள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தக் கேள்வி பாபநாசத்திலிருந்து 2, 3 ஊர்களுக்கு பஸ் விடப்படுமா என்பது. உங்கள் ஊருக்கும் விடப்படுமா என்று கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : அதேபோல், சேலத்திற்குச் செல்லும் பஸ் எங்கள் தொகுதி வழியாகச் செல்வதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவன் கண்ட உலகினுக்கு என்று சொல்வார்கள். வள்ளுவன் குறளைப் பார்க்கிறபோது, சுருக்கமாக, இருக்கிறது என்று அதைச் சொல்வார்கள். ஆனால் உறுப்பினர் அவர்கள் விரிவாகச் சொல்லியிருக்கிறார். அவருக்கு ஒரு ஆசை. தன்னுடைய பகுதிக்கு பேருந்து வருமா என்ற ஆசை. 250 கிலோ மீட்டருக்கு மேலே இருந்தால்தான் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி, சென்னையாக இருந்தாலும் சரி. மற்ற பகுதிகளுக்காக இருந்தாலும் சரி.

1994 மார்ச் 25]

200 கிலோ மீட்டருக்கு உள்ளடங்கி இருக்கிற காரணத்தால், சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *போகிற பஸ்ஸை அந்தப் பக்கமாக விடுங்களேன். பாவம் அதைத் தான் கேட்கிறார்.*

வினா எண். 86, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

86–

சிவகாசி தொகுதியில் கூட்டுறவு நூற்பு ஆலை அமைத்தல்.

** 22301* **திரு. ஜெ. பாலகங்காதரன்:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்கப்படுமா?

(ஆ) இல்லை என்றால், தனியார் நிறுவனங்கள் நூற்பு ஆலை அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) தற்சமயம் சிவகாசி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை,

(ஆ) தனியார் நிறுவனங்கள் புதிதாக நூற்பாலை அமைப்பதற்கு அரசு அளவில் நிதி உதவி எதுவும் அளிக்கப்படுவதில்லை.

முற்பகல் 10.25

திரு. ஜெ. பாலகங்காதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஒப்பற்ற தானைத் தலைவி, தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே இன்றைய தினம் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அளித்துக் கொண்டிருக்கிற வேளையில் சிவகாசியிலே தீப்பெட்டித் தொழிலை மட்டும் நம்பியிருக்கின்ற இன்றையதினம் இந்தத் தொழில் நசிந்து வருகின்ற காரணத்தினால் வேறு தொழிலுக்கு செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே டிரெளட் ஸ்கீமில் கரிசல் பூமியாக இருக்கின்ற காரணத்தினால் பருத்தி அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. அங்கேயிருக்கின்ற விவசாயிகள் அத்தனை பேரும்*